OS: 739/2018

Date: 23.01.2024

பெயர்  :காந்தா

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை :**- 2, 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்

எனக்கு 1 ஆண்மகன் மற்றும் 3 பெண்மக்கள் உள்ளார்கள். எனது பெரிய மகளுக்கு என்ன வயதிருக்கும் என்றால் சுமார் 50 இருக்கும். எனது தந்தை இறந்து சுமார் எவ்வளவு காலம் இருக்கும் என்றால் 15 – 17 ஆண்டுகள் இருக்கும். எனக்கு திருமணமாகி எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் சுமார் 55 ஆண்டுகள் இருக்கும், எனது கடைசி மகன் பிறக்கும்போது எனது தந்தை உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இருந்தார். தாவா 2, 5, 6, 7 பிரதிவாதிகள் எனது தம்பி குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியின் மகன்கள் தான் 8, 9 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 10 ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் எனது தம்பி மனைவி ஆவார். எனது தம்பி 1 ம் பிரதிவாதி 12, 13 பிரதிவாதிகளுக்கு செய்துகொடுத்துள்ள கிரய ஆவணங்கள் செல்லாது என வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 3 கிரய ஆவணங்களும் எனது தந்தை கையெழுத்து செய்துதான் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் எனது தந்தை கையெழுத்து போட்டுள்ளாரா அல்லது இல்லையா என்று எனக்கு தெரியாது. எனது தாவாவில் கிரய ஆவணங்களில் எனது தந்தையும் கையெழுத்து செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பிகள் 1, 2, 3 ஆகியோருடன் தனித்தனியாக தாவா சொத்தினை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அனைரும் சேர்ந்து கூட்டாகத்தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறோம். 10, 12, 13 பிரதிவாதிகள் தனியாக நிலத்தினை ஓட்டிவருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் கிரயம் வாங்கியது தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

தாவா சொத்தில் இரண்டு மெத்தை வீடு உள்ளது என்றால் சரிதான். அந்தவீட்டில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்றால் சேட்டுவும், ராஜாவும் குடியிருக்கிறார்கள். அந்த வீட்டில் எங்களுக்கும் பாகம் உள்ளது.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.